(ஆறாவது பாராளுமன்றம் - மூன்றாவது கூட்டத்தொடர்)

இல. 23 ]

# பாராளுமன்றம்

## ஒழுங்குப் பத்திரம்

**2008, செத்தெம்பர் 23, செவ்வாய்க்கிழமை, மு. ப. 9.30 மணிக்கு**

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

0063/ '08

1.

கௌரவ ரவி கருணாநாயக்க,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 1994 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 25 இல் இயங்கிய மற்றும் இன்று இயங்கிவருகின்ற (தேசிய மற்றும் மாகாணப்) பாடசாலைகளின் எண்ணிக்கையினை வெவ்வேறாகவும்,

(ii) அப்பாடசாலைகளின் மாணவர்களின் எண்ணிக்கையினை 1994 ஆம் ஆண்டு ஏப்பிறல் 25 இல் இருந்தவாறு மற்றும் இன்றுள்ளவாறு வெவ்வேறாகவும்,

(iii) 1994 ஆம் ஆண்டு ஏப்பிறல் 25 இலும் மற்றும் நடப்பு ஆண்டிலும் கல்விக்கென மொத்தமாக ஒதுக்கப்பட்ட தொகையினை வெவ்வேறாக அதன் டொலர் சமானத்துடனும்,

(iv) 1994 ஆம் ஆண்டு ஏப்பிறல் 25 இலுள்ளவாறாக மற்றும் இன்றுள்ளவாறாக டொலரின் பெறுமதியை ரூபாவிலும்

அவர் இச்சபைக்கு அறியத்தருவாரா?

(ஆ) கடந்த 14 வருடங்களில் நாட்டின் கல்வி முறைமை முன்னேறியுள்ளது என்பதை அவர் ஏற்றுக்கொள்வாரா?

(இ) அவ்வாறாயின், அதன் காரணத்தையும் நன்மைகளையும் அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0065/ '08

2.

கௌரவ ரவி கருணாநாயக்க,— நீர்ப்பாசன, நீர் முகாமைத்துவ அமைச்சரும் துறை முகங்கள், விமான சேவைகள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2004 ஆம் ஆண்டு முதல் இற்றைவரையும் கொழும்புத் துறைமுகத்திற்கு வந்த உள்நாட்டுக் கொள்கலன்கள் மற்றும் ஏற்றி இறக்கும் கொள்கலன்களின் எண்ணிக்கையை வெவ்வேறாகவும்,

(ii) தெற்காசிய நுழைவாயில் இறங்குதுறை ஊடாகச் செல்லும் உள்நாட்டுக் கொள்கலன்களின் நூற்றுவீதத்தையும்,

(iii) எஸ். ஏ. ஜீ. ரீ. அதன் தொழிற்பாடுகளை ஆரம்பித்த திகதி முதல் பெறப்பட்ட வருமானத்தை வருடாந்த அடிப்படையிலும்,

அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(ஆ) இந்த வருமானங்களுடன் தெற்காசிய நுழைவாயில் இறங்குதுறை (SAGT) கருத்திட்டத்திலிருந்து பெறுவதற்கு உத்தேசிக்கப்பட்ட வருமானத்தின் வருடாந்த அடிப்படையிலான ஒப்பீட்டை அவர் இச்சபையில் சமர்ப்பிப்பாரா?

(இ) (i) கொழும்புத் துறைமுகத்தினதும் SAGT யினதும் பணியாளர் குழு உறுப்பினர்களின் எண்ணிக்கையை வெவ்வேறாகவும்,

(ii) கொழும்புத்துறைமுகத்தின் ஊழிய மற்றும் ஏனைய ஆட்சேர்ப்புச் செலவையும்

அவர் கூறுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0066/ '08

3.

கௌரவ ரவி கருணாநாயக்க,— சுகாதார நலத்துறை, போசணை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) அரச மருந்தாக்கற் கூட்டுத்தாபனம் இவ்வமைச்சின் கீழ் வருகிறதா என்பதை அவர் கூறுவாரா?

(ஆ) அவ்வாறெனின், இன்றுவரை கடந்த மூன்று வருடங்களில் -

(i) அவர்களுக்குக் கிடைக்க வேண்டிய பணம் எவ்வளவென்பதையும்,

(ii) அவர்கள் செலுத்தவேண்டியுள்ள பணம் எவ்வளவென்பதையும்,

(iii) அரச மருந்தாக்கற் கூட்டுத்தாபனத்திற்கு ஏனையோர் செலுத்தவேண்டியுள்ள பணம் எவ்வளவென்பதையும்,

(iv) அரச மருந்தாக்கற் கூட்டுத்தாபனம் கொண்டுள்ள சந்தைப் பங்கையும்

அவர் கூறுவாரா?

(இ) (i) இந்நிறுவனத்தில் மூலதனப் பற்றாக்குறை நிலவுகின்றதா என்பதையும்,

(ii) அவ்வாறெனின், அதனைச் சீர்செய்வதற்குத் தேவையான பணம் எவ்வளவு என்பதையும்,

(iii) சில மருந்துகளுக்கான தனியுரிமையை அது கொண்டுள்ளதா என்பதையும்,

(iv) அவ்வாறெனின், அந்த மருந்துகளின் பெயர்களையும்

அவர் கூறுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0159/ '08

4.

கௌரவ லக்ஷ்மன் நிபுணஆரச்சி,— நகர அபிவிருத்தி, புனிதப் பகுதிகள் அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2007ஆம் ஆண்டுக்கான திருத்தப்பட்ட வரவு செலவுத் திட்டம் (2008 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத்திட்ட மதிப்பீட்டில் குறிப்பிட்டுள்ளவாறு) மூலமாக, நகர அபிவிருத்தி அதிகார சபையின் கீழ் நகர அபிவிருத்திக்காக 889 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டிருந்ததென்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) அதன் பிரகாரம் 2007 ஆம் ஆண்டில் செலவு செய்த பணம் எவ்வளவு,

(ii) அது எத்தகைய கருத்திட்டங்களுக்கானது

என்பதை அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

0160/ ’08

5.

கௌரவ லக்ஷ்மன் நிபுணஆரச்சி,— நகர அபிவிருத்தி, புனித பகுதிகள் அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2007ஆம் ஆண்டுக்கான திருத்தப்பட்ட வரவு செலவுத் திட்டம் (2008 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத்திட்ட மதிப்பீட்டில் குறிப்பிட்டுள்ளவாறு) மூலமாக, சமுதாய நீர் வழங்கலுக்காக 1,940 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டிருந்ததென்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) அதன் பிரகாரம் 2007ஆம் ஆண்டில் செலவு செய்த பணம் எவ்வளவு,

(ii) அது எத்தகைய கருத்திட்டங்களுக்கானது

என்பதை அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

0161/ ’08

6.

கௌரவ லக்ஷ்மன் நிபுணஆரச்சி,— நகர அபிவிருத்தி, புனித பகுதிகள் அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2007ஆம் ஆண்டுக்கான திருத்தப்பட்ட வரவு செலவுத் திட்டம் (2008 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத்திட்ட மதிப்பீட்டில் குறிப்பிட்டுள்ளவாறு) மூலமாக, இலங்கை காணி, நிலமீட்டல் அபிவிருத்திக் கூட்டுத்தாபனத்தின் கீழ் கால்வாய்களின் புனரமைப்பிற்கும் பராமரிப்பிற்குமாக 72 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டிருந்ததென்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) அதன் பிரகாரம் 2007ஆம் ஆண்டில் செலவு செய்த பணம் எவ்வளவு,

(ii) அது எத்தகைய கருத்திட்டங்களுக்கானது

என்பதை அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

0360/ ’08

7.

கௌரவ ரஞ்சித் அலுவிஹாரே,— பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) எல்லைக் கிராமங்கள், வீதித் தடைகள், அடங்கலாக பல இடங்களில் பாதுகாப்புக்கென ஈடுபடுத்தப்பட்டுள்ள சிவில் பாதுகாப்புப் படைக்குச் சொந்தமான உத்தியோகத்தர்களின் சம்பள முரண்பாடொன்று நிலவுவதை அவர் அறிவாரா?

(ஆ) கிட்டத்தட்ட 18 வருட காலமாக சேவையில் ஈடுபட்டிருக்கும் உத்தியோகத்தர் களுக்கும் உரிய ஆட்சேர்ப்பின் கீழ் சேவைக்குச் சேரும் உத்தியோகத்தர்களுக்கும் ஒரே சம்பளத் திட்டமாக இருப்பதனால் இந்த உத்தியோகத்தர்கள் விரக்த்தியடைந்துள்ளார்கள் என்பதை அவர் ஏற்றுக் கொள்வாரா?

(இ) பொலிஸ் உத்தியோகத்தர்களின் கடமைக்குச் சமமான அர்ப்பணிப்புடன் கடமை புரியும் சிவில் பாதுகாப்புப் படையினருக்கு முறையான சம்பளத் திட்டமொன்றை வழங்கி, சேவையில் நிரந்தரமாக்கி, ஓய்வூதியம் பெறும் நிலைக்குக் கொண்டுவர அவர் நடவடிக்கை எடுப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0361/ ’08

8.

கௌரவ ரஞ்சித் அலுவிஹாரே,— பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) அநுராதபுரம் மேற்கு, மஹவிலச்சிய விவசாயக் குடியேற்றத்தின் தெற்குக்கரை, 512 ஆம் இலக்க காணியில் வசித்த யூ. பி. கருணாரத்ன என்பவர் 2007 ஆம் ஆண்டு ஓகத்து 14 ஆம் திகதி இரவு அவரது வயலிலுள்ள குடிசைக்குச் சென்றிருந்தபோது ஆயுதம் ஏந்திய குழுவொன்றினால் கடத்திச் செல்லப் பட்டுள்ளார் என்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) இவரைக் கண்டுபிடிப்பதற்காக எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கை யாதென் பதையும்,

(ii) இவர் தற்போது உயிருடன் இருப்பின், எங்கு இருக்கிறார் என்பதையும்,

(iii) இவரது குடிசைக்கு அருகில் இரு ஊர்காவற்படையினர் கடமையிலிருந்த போதிலும் இவர் கடத்தப்படுவதற்கான காரணம் யாதென்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

0362 / ’08

9.

கௌரவ ரஞ்சித் அலுவிஹாரே,— அனர்த்த முகாமைத்துவ, மனித உரிமைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2007 ஆம் ஆண்டு சனவரி 11, 12 ஆகிய திகதிகளில் வலப்பனை பிரதேசத்தில் பெய்த கடும் மழை காரணமாக ஏற்பட்ட மண்சரிவினால் இடம்பெயர்ந்த குடும்பங்களின் எண்ணிக்கை எவ்வளவு என்பதை அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(ஆ) (i) இந்த இடம்பெயர்ந்த குடும்பங்களுள் இற்றைவரை கூடாரங்களில் வாழ்கின்ற குடும்பங்களின் எண்ணிக்கை எவ்வளவு,

(ii) இவர்களை மீளக்குடியேற்ற எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாது,

(iii) அதுவரை இவர்களுக்கு வழங்கப்பட்டுள்ள நிவாரண உதவிகள் யாவை

என்பதை அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

0497/ ’08

10.

கௌரவ விஜித ஹேரத்,— பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதியமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) பாராளுமன்ற அல்லது மாகாணசபை உறுப்பினர் அல்லாத பயங்கரவாத அச்சுறுத்தல்களுமற்ற நபர்களின் பாதுகாப்புக்கென அரச பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளனரா என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இவ்வாறு பாதுகாப்புப் பெறும் நபர்கள் யாவர் என்பதை அவர் இச்சபைக்குச் சமர்ப்பிப்பாரா?

(இ) (i) இந்நபர்களுக்கு இவ்வாறு பாதுகாப்பு வழங்க சிபாரிசு செய்தது யார்,

(ii) இப்பாதுகாப்பு வழங்கப்படும் அடிப்படை யாது

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இவ்வாறு பாதுகாப்புப் பெறும் சிலர் இப்பாதுகாப்பை ஒரு சிறப்புரிமையாகக் கொண்டு பலவித சமூகவிரோதச் செயல்களில் ஈடுபடுகின்றனரென குற்றஞ்சாட்டப்படுவதனால் இச்செயல்களை நிறுத்த அவர் எடுக்கும் நடவடிக்கைகள் யாதென்பதைக் குறிப்பிடுவாரா?

(உ) இன்றேல், ஏன்?

0498/ '08

11.

கௌரவ விஜித ஹேரத்,— நீர்ப்பாசன, நீர் முகாமைத்துவ அமைச்சரும் துறைமுகங்கள், விமானச் சேவைகள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) மெக்டொனாட்ஸ் ரெஸ்டோரன்ட் நிறுவனத்தை அமைப்பதற்காக, இராஜகிரிய கொட்டா வீதியிலுள்ள நீர்ப்பாசனத் திணைக்களத்திற்குச் சொந்தமான ஒரு காணி அபான்ஸ் ரெஸ்டொரன்ட் (தனியார்) நிறுவனத்துக்கு எந்த அடிப்படையில் வழங்கப்பட்டுள்ளதென்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) குறிப்பிட்ட உடன்படிக்கையை அவர் இச்சபைக்குச் சமர்ப்பிப்பாரா?

(இ) (i) இந்நிறுவனம் நீர்ப்பாசனத் திணைக்களத்திற்கு உத்தியோகபூர்வ விடுதிகளை அமைத்துத்தர இணங்கியுள்ளதா,

(ii) அவ்வாறாயின், இணங்கிக் கொள்ளப்பட்ட திகதியளவில் அமைக்கப்பட்டுள்ள விடுதிகளின் எண்ணிக்கை யாது,

(iii) இணங்கிக் கொள்ளப்பட்டவாறு உத்தியோகபூர்வ விடுதிகள் அமைக்காமை தொடர்பாக மேற்கொள்ளப்படும் நடவடிக்கை யாது

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0635 / '08

12.

கௌரவ திலகரத்ன விதானாச்சி,— பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) காலி மாவட்டத்தில் அரச காணிகள், குத்தகை அடிப்படையில் தனியார் தோட்டங்களுக்கு வழங்கப்பட்ட போது, இந்த ஒவ்வொரு காணியிலுமிருந்த பலா, நெதுன், மஹோகனி ஆகிய மரங்கள் எத்தனை என்பது பற்றி ஆவணப்படுத்தப்பட்டுள்ளதா,

(ii) இதுவரை இம்மரங்களில் எத்தனை எஞ்சியிருக்கின்றன,

(iii) அகற்றப்பட்டிருப்பின் அம்மரங்களின் எண்ணிக்கை யாது,

(iv) அது எக்காரணத்திற்காக

என்பதை அவர் இச்சபைக்கு சமர்ப்பிப்பாரா?

(ஆ) மேற்குறிப்பிட்ட குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ள காணிகளிலிருந்த பெருந் தொகையான பலா மரங்கள் அகற்றப்பட்டுள்ளனவென்பதை அவர் அறிவாரா?

(இ) இவ்வாறு மரங்களை வெட்டி அகற்றுவதற்காக பிரதேச செயலாளர் காரியாலயத்திலும் உரிய அமைச்சிலும் அனுமதி பெறப்பட்டுள்ளதா?

(ஈ) உத்தியோகத்தர்கள் இம்மரங்களைப் பெற்றுக் கொள்கையில் சட்டம் செயற் படுத்தப்படுகின்றதாவென உரிய அமைச்சினால் விசாரிக்கப்படுகின்றதா என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(உ) இவ்வாறான அறிவித்தல்கள் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஊ) இன்றேல், ஏன்?

0636/ ’0 8

13.

கௌரவ திலகரத்ன விதானாச்சி,— பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அரசாங்கத்திற்குச் சொந்தமாக இருந்த மற்றும் தனியார் துறைக்கு குத்தகை அடிப்படையில் வழங்கப்பட்டிருந்த காலி மாவட்டத்திலிருந்த தோட்டங் களின் பெயர்கள் யாவை என்பதையும்,

(ii) அவ்வாறு குத்தகைக்கு விடும்போது ஒவ்வொரு தோட்டத்திலும் இருந்த பயிர்ச்செய்கைகள் யாவை, அவற்றின் அளவு எத்தனை ஹெக்டயர்கள் என்பதை வெவ்வேறாகவும்,

(iii) மேற்படி குத்தகை அரசாங்கத்திற்கு கிடைப்பது வருடாந்தமா அல்லது மாதாந்தமா என்பதையும்,

(iv) மேற்படி குத்தகைக்கு இடுதல் மூலமாக அரசாங்கத்திற்குக் கிடைக்கப்பெற்ற வருமானம் மேற்படி குத்தகைக்கு விடப்பட்ட வருடத்திலிருந்து 2006 ஆம் ஆண்டு வரை வருட ரீதியாக வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்

அவர் இச்சபையில் சமர்ப்பிப்பாரா?

(ஆ) (i) மேற்படி தோட்டங்களைக் குத்தகைக்கு விடும் போது இறப்பர் செய்கை மேற்கொள்ளப்பட்டிருந்த ஹெக்டயர்களின் அளவு எவ்வளவென்பதோடு தற்போது இருக்கின்ற ஹெக்டயர்களின் அளவு வெவ்வேறாக எவ்வள வென்பதையும்,

(ii) தேயிலைத் தொழிற்சாலைகள், சிற்றுண்டிச்சாலைகள் மற்றும் வீட்டுப் பாவனைக்காக இறப்பர் விறகு பயன்படுத்தப்பட்டாலும், தற்போது இறப்பர் மரங்களை பிடுங்கிவிட்டு அதற்குப் பதிலாக ஒயில் பாம் செய்கை விஸ்தரிப்பை தோட்டக்கம்பனிகள் மேற்கொண்டு வருவதால் எதிர்காலத்தில் இந்த நிலைமையை மாற்றி இறப்பர் செய்கையை விஸ்தரிப்பதற்கு தேவையான பணிப்புரையை அவர் வழங்குவாரா என்பதையும்

அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

0637/ ’08

14.

கௌரவ திலகரத்ன விதானாச்சி,— காணி, காணி அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) காலி, நாகொட பிரதேச செயலாளர் பிரிவில் அமைந்துள்ளதும் கொத்தலாவல கொட்டல பத்தலகம, இலக்கம் 02 பிரிவில் 80 ஏக்கர் பிரதேசத்தை உள்ளடக்கியதும் காணி சீர்திருத்த ஆணைக்குழுவிற்குச் சொந்தமானதும் அரசாங்கத்தினால் சுவீகரிக்கப்பட்டதுமான காணியின் பரப்பளவு எவ்வளவு,

(ii) இதில் 2007 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் வரை பகிர்ந்தளிக்கப்பட்ட காணியின் பரப்பளவு எவ்வளவு,

(iii) மேற்படி காணி பெறுநர்களின் பெயர், முகவரி மற்றும் வழங்கப்பட்டுள்ள காணியின் அளவு யாது

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி காணி பெறுநர்கள் குறித்த காணிகளில் வசிக்கின்றார்களா அல்லது அனுபவிப்பு உரிமையைக் கொண்டுள்ளார்களா,

(ii) தமக்குக் கிடைத்த காணியை இன்னொருவருக்கு ஒப்படைத்துள்ள அல்லது சட்டரீதியற்ற விதத்தில் விற்பனை செய்துள்ளவர்களின் பெயர், முகவரி யாது,

(iii) அவ்வாறெனில், அது தொடர்பாக மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கை யாது

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) அரசாங்கத்திலிருந்து இலவசமாகக் காணிகளைப் பெற்றுக் கொண்டதன் பின்னர் அவற்றை விற்பனை செய்துவிட்டு மீண்டும் அரச காணிகளை அத்துமீறிக் கைப்பற்றுதல் மேற்படி பிரதேசங்களில் தாராளமாக நடைபெறுவதன் காரணத்தினால், அரசாங்கத்திற்குச் சொந்தமான காணிகளைப் பாதுகாக்கும் பொருட்டு எல்லைகளை அடையாளமிட்டு தேவையான நடவடிக்கைகள் எவ்வளவு காலத்தினுள் மேற்கொள்ளப்படும் என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0667/ ' 08

15.

கௌரவ சமன்சிறி ஹேரத்,— பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதியமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மெல்லவாகார, மாதம்பே முகவரியைக் கொண்ட திரு. ஆர். பி. விஜேரத்ன கடற்படையில் எவ்வளவு காலம் சேவையாற்றினார்,

(ii) இவரைச் சேவையிலிருந்து நீக்கியமைக்கான காரணம் யாது,

(iii) இவர் சேவையிலிருந்து நீக்கப்படுவதற்கு முன்னர் அல்லது பின்னர், இவருக்கு எதிராக ஏதேனும் ஒழுக்காற்று விசாரணை மேற்கொள்ளப் பட்டதா,

(iv) ஆமெனில், அது எப்போது மற்றும் அவ்விசாரணையை நடாத்திய உத்தியோகத்தர்கள் யார்,

(v) ஒழுக்காற்று விசாரணையின் போது இவருக்கு எதிராக இருந்த விடயங்கள் அல்லது குற்றச்சாட்டுகள் யாவை,

(vi) மேற்படி விசாரணையின் பின்னர், அதனுடன் தொடர்புடைய அறிக்கைகள் மற்றும் ஆவணங்களை இவருக்கு வழங்குவதற்கு நடவடிக்கையெடுக்கப் பட்டதா,

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) திரு. ஆர். பி. விஜேரத்னவை மீண்டும் சேவையில் அமர்த்துவதற்கு அவர் நடவடிக்கையெடுப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

# பொது அலுவல்கள் ஆரம்பத்தின் போது

## சட்டமூல சமர்ப்பண முன்னறிவித்தல்

1.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதியமைச்சருமானவர்,— இந்திய வம்சாவழியினரான ஆட்களுக்கு பிரசாவுரிமை வழங்கல் (திருத்தம்),— 2003 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க, இந்திய வம்சாவழியினரான ஆட்களுக்கு பிரசாவுரிமை வழங்கல் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டமூலம்.

2.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதியமைச்சருமானவர்,— நாடற்ற ஆட்களுக்குப் பிரசாவுரிமை வழங்குதல் (சிறப்பேற்பாடுகள்) (திருத்தம்),— 1988 ஆம் ஆண்டின் 39 ஆம் இலக்க, நாடற்ற ஆட்களுக்குப் பிரசாவுரிமை வழங்குதல் (சிறப்பேற்பாடுகள்) சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டமூலம்.

3.

காணி, காணி அபிவிருத்தி அமைச்சர்,— காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டம் (திருத்தம்),— காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டமூலம்.

4.

போக்குவரத்து அமைச்சர்,— இலங்கைப் போக்குவரத்துச் சபை (திருத்தம்),— 2005 ஆம் ஆண்டின் 27 ஆம் இலக்க, இலங்கைப் போக்குவரத்துச் சபைச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டமூலம்.

## பிரேரணை முன்னறிவித்தல்

5.

பாராளுமன்றச் சபைமுதல்வர்,— பாராளுமன்ற அமர்வு,— 7 ஆம் இலக்க நிலையியற் கட்டளையின் ஏற்பாடுகளினாலும் 2008.06.05 ஆம் திகதி பாராளுமன்றத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பிரேரணையினாலும் தடைபெறாமல் இன்றைய தினம் சபை அமர்வு நேரம் மு.ப. 9.30 மணி முதல் பி.ப. 12.30 மணிவரையும், பி.ப. 1.00 மணி முதல் பி.ப. 4.30 மணிவரையும் இருக்குமாக. பி.ப. 2.00 மணிக்கு 7 ஆம் இலக்க நிலையியற் கட்டளையின் (5) ஆம் பந்தி தொழிற்படுமாக.

6.

பாராளுமன்றச் சபைமுதல்வர்,— ஆலோசனைக் குழுக்கள்,— 106 ஆம் இலக்க நிலையியற் கட்டளையின் ஏற்பாடுகளினாலும் 2008.07.08 ஆம் திகதி பாராளுமன்றத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பிரேரணையினாலும் தடைபெறாமல் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் மீதான ஆலோசனைக் குழுவானது தெரிவுக்குழுவினால் நியமிக்கப்படும் ஐந்து (05) உறுப்பினர்களுக்கு குறையாததும் முப்பத்தி மூன்று (33) உறுப்பினர்களுக்கு விஞ்சாததுமான உறுப்பினர்களை கொண்டிருக்குமாக.

7.

பாராளுமன்றச் சபைமுதல்வர்,— பொதுமனுக்கள் குழு,— 128 ஆம் இலக்க நிலையியற் கட்டளையின் ஏற்பாடுகளினாலும் 2008.07.08 ஆம் திகதி பாராளுமன்றத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பிரேரணையினாலும் தடைபெறாமல் பொது மனுக்கள் குழு மீதான ஆலோசனைக் குழுவானது தெரிவுக்குழுவினால் பெயர் குறித்துரைக்கப்படும் முப்பத்தி மூன்று (33) உறுப்பினர்களைக் கொண்டிருக்குமாக.

8.

கௌரவ (திருமதி) நிரூபமா ராஜபக்ஷ,— சட்டமூலம் கொண்டுவர அனுமதி,— பின்வரும் சட்டமூலம் கொண்டுவர அனுமதி வழங்கப்படுமாக,—

"1981 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்க, இலங்கை சிறுகைத்தெழிற் சபையை (கூட்டிணைத்தல்) சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டமூலம்"

---

# பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

*1.

தகவல் அத்துடன் தொடர்புத் தொழில்நுட்பவியல் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*2.

தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை (சிறப்பேற்பாடுகள்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*3.

நகரக் குடியமர்த்தல் அபிவிருத்தி சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*4.

நகர அபிவிருத்தி, புனிதப் பகுதிகள் அபிவிருத்தி அமைச்சர்,— நகர அபிவிருத்தி அதிகாரசபைச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— தேசிய அரசுப் பேரவையின் 1978 ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்க, நகர அபிவிருத்தி அதிகாரசபைச் சட்டத்தின் 21 ஆம் பிரிவின் (1) உட்பிரிவின் கீழ் நகர அபிவிருத்தி, புனிதப் பகுதிகள் அபிவிருத்தி அமைச்சரால் ஆக்கப்பட்டு 2008, யூன் மாதம் 27 ஆந் திகதிய 1555/32 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும் 2008.07.25 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

*5.

சீன வம்சாவழியினரான ஆட்களுக்குப் பிரசாவுரிமை வழங்கல் (விசேட ஏற்பாடுகள்) சட்டமூலம். — இரண்டாம் மதிப்பீடு.

*6.

கடற்றொழில், நீரக வளமூலங்கள் அமைச்சர்,— கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— 1996 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் சட்டத்தின் 61 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (ஔ) மற்றும் (க) ஆம் பந்திகளின் கீழ் கடற்றொழில், நீரியல் வளங்கள் அமைச்சரால் ஆக்கப்பட்டு 2007, திசெம்பர் 17 ஆந் திகதிய 1528/7 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும் 2008.08.05 ஆம் திகதி சமர்ப்பிக்கப் பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

*7.

கடற்றொழில், நீரக வளமூலங்கள் அமைச்சர்,— இலங்கைத் தேசிய நீரியல் பொருட்களைப் பயன்படுத்துதல் அபிவிருத்தி அதிகாரசபைச் சட்டத்தின் ஒழுங்குவிதிகள் (இல.1),— 1998 ஆம் ஆண்டின் 53 ஆம் இலக்க, இலங்கைத் தேசிய நீரியல் பொருட்களைப் பயன்படுத்துதல் அபிவிருத்தி அதிகார சபைச்சட்டத்தின் 37 ஆம் பிரிவின் 2 ஆம் உட்பிரிவின் (இ) ஆம் பந்தியின் கீழ் கடற்றொழில், நீரகவளமூலங்கள் அமைச்சரால் ஆக்கப்பட்டு 2007, சனவரி மாதம் 22 ஆந் திகதிய 1481/3 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும் 2008.09.09 ஆந் திகதி சமர்ப்பிக்கப் பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

*8.

கடற்றொழில், நீரக வளமூலங்கள் அமைச்சர்,— இலங்கைத் தேசிய நீரியல் பொருட்களைப் பயன்படுத்துதல் அபிவிருத்தி அதிகாரசபைச் சட்டத்தின் ஒழுங்குவிதிகள் (இல.2),— 1998 ஆம் ஆண்டின் 53 ஆம் இலக்க, இலங்கைத் தேசிய நீரியல் பொருட்களைப் பயன்படுத்துதல் அபிவிருத்தி அதிகார சபைச்சட்டத்தின் 37 ஆம் பிரிவின் 2 ஆம் உட்பிரிவின் (இ) ஆம் பந்தியின் கீழ் கடற்றொழில், நீரகவளமூலங்கள் அமைச்சரால் ஆக்கப்பட்டு 2008, பெப்புருவரி மாதம் 13 ஆந் திகதிய 1536/12 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும் 2008.09.09 ஆந் திகதி சமர்ப்பிக்கப் பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

*9.

தாவர, விலங்கினப் பாதுகாப்பு (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு .

*10.

கல்வி அமைச்சர்,— குறைநிரப்பும் தொகை — தலைப்பு 212, நிகழ்ச்சித்திட்டம் 2,— † 2008 ஆம் ஆண்டு சனவரி மாதம் 1 ஆம் திகதி தொடங்கி 2008 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆம் திகதி முடிவடையும் நிதியாண்டின் சேவைக்கு இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் திரட்டு நிதியத்தினின்றும் அல்லது இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசாங்கத்தினதும் அல்லது இலங்கைச் சனநாயக சோசலிச குடியரசின் அரசாங்கம் பயன்படுத்தக்கூடிய வேறெந்த நிதியிலிருந்தும் அல்லது பணத்திலிருந்தும் அல்லது இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசாங்கம் பெற்றிருக்கும் எந்தக் கடன் நிதியத்திலிருந்தும் நானூற்றி நாற்பத்தியொரு மில்லியன், எண்ணூறாயிரம் (ரூபா 441,800,000) ரூபாவிற்கு மேற்படாத குறைநிரப்பும் தொகையொன்று வழங்கப்படல் வேண்டும். அத்தொகை பின்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு செலவு செய்யப்படலாம்:-

**அட்டவணை**

| | | | |
|---|---|---|---|
| | | | ரூபா |
| தலைப்பு 212 | — | இலங்கை பரீட்சைத் திணைக்களம் | |
| நிகழ்ச்சித்திட்டம் 2 | — | அபிவிருத்தி நடவடிக்கைகள் | |
| | | மீண்டுவரும் செலவினம் | 441,800,000 |
| | | ஆக்கப்பொருட் செலவு | — |
| | | மொத்தம் | 441,800,000 |

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

† 2008, ஓகத்து மாதம் 22 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2008 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க குறைநிரப்பும் மதிப்பீட்டைப் பார்க்க. இலக்கம் 1 முதல் 5 வரையுள்ள மதிப்பீடுகளின் மொத்தம் ரூபா 15,070,180,332.

*11.

இலங்கைப் பகிரங்கத் தொழில் முயற்சிகள் சீர்திருத்த ஆணைக்குழு (நீக்கச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*12

தேசிய பொதுவழிகள் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*13.

தேசிய புடைவை மற்றும் உடுதுணி நிறுவகச் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*14.

குடியியல் வான்செலவு சட்டமூலம். — இரண்டாம் மதிப்பீடு.

*15.

குற்றச் செயல்களுக்குப் பலியாக்கப்பட்டோருக்கும் சாட்சிகளுக்குமான உதவி மற்றும் பாதுகாப்பு சட்டமூலம் — விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (யூன் 17, 2008) [1].

*16.

இலங்கை மின்சாரச் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*17

ஆளுநர்களின் ஓய்வூதிய சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*18.

இலங்கை கடன் தகவல் பணியக (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*19.

மிகைப்பொருள் திணிப்பெதிர்ப்பு மற்றும் எதிரீட்டுத் தீர்வைகள் சட்டமூலம்— விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (ஏப்பிறல் 04, 2006) [1].

*20.

வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) (திருத்தச்) சட்டமூலம் — விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (யூலை 18, 2006) [1].

*21.

செயலூக்கமற்ற சொத்துக்கள் (மீட்புச்) சட்டமூலம் — விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (யூலை 18, 2006) [1].

*22.

சூதாட்ட (விசேட ஏற்பாடு) சட்டமூலம் — விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (யூலை 18, 2006) [1].

*23.

முற்பாதுகாப்பு வழிமுறைகள் சட்டமூலம் — விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (ஏப்பிறல் 04, 2006) [1].

*24.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சருமானவர்,— ஒதுக்கீட்டுச் சட்டத்தின் கீழான தீர்மானம்,— 2006 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவினால் தமக்களிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம், அரசாங்கத்தின் அங்கீகாரத் துடன் நிதி, திட்டமிடல் அமைச்சரால் ஆக்கப்பட்டு 37 ஆம் இலக்க கட்டளையில் குறித்துரைக்கப்பட்ட கட்டளை அங்கீகரிக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

## 2006 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டம்

### 8 ஆம் பிரிவின் கீழான கட்டளை இல. 37

2006 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவினால் எனக்கு அளிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம் நிதி, திட்டமிடல் அமைச்சர் மஹிந்த ராஜபக்ஷ ஆகிய நான் அரசாங்கத்தின் அங்கீகாரத்துடன் இக் கட்டளை மூலம் அச்சட்டத் தின் இரண்டாம் அட்டவணையின் 30602 ஆம் இலக்க, செயற்பாட்டு விடயம் “இலங்கைப் புகையிரதத் திணைக்கள பண்டகசாலை முற்பணக் கணக்கு” — இலங்கை புகையிரதத் திணைக்களம் என்பதற்கெதிராக குறித்துரைக்கப்பட்ட எல்லைகளை மாற்றுகின்றேன் :-

(i) அச்சட்டத்தின் இரண்டாம் அட்டவணையின் நிரல் **II** இல் குறித்துரைக்கப்பட்ட செலவின் உச்ச எல்லை — மீளாய்வு செய்யப்படவில்லை.

(ii) அச்சட்டத்தின் இரண்டாம் அட்டவணையின் நிரல் **III** இல் குறித்துரைக்கப் பட்ட பெறுகைகளின் ஆகக் குறைந்த எல்லை ரூபா 1,000,000,000 இலிருந்து ரூபா 680,000,000 வரை.

(iii) அச்சட்டத்தின் இரண்டாம் அட்டவணையின் நிரல் **IV** இல் குறித்துரைக் கப்பட்ட பற்றுமீதியின் உச்ச எல்லை ரூபா 3,800,000,000 இலிருந்து ரூபா 3,900,000,000 வரை.

(iv) அச்சட்டத்தின் இரண்டாம் அட்டவணையின் நிரல் V இல் குறித்துரைக்கப்பட்ட பொறுப்புக்களின் உச்ச எல்லை ரூபா 400,000,000 இலிருந்து ரூபா 550,000,000 வரை.

(இக்கட்டளை 2007.12.31 ஆம் திகதி வரை மட்டுமே செல்லுபடியாகும்.)

*ஒப்பம் :* மஹிந்த ராஜபக்ஷ,
நிதி, திட்டமிடல் அமைச்சர்.

கொழும்பு 01,
2008.08.28.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*25.

பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சர்,— இலங்கை தேயிலைச் சபைச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— 1975 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, இலங்கை தேயிலைச் சபைச் சட்டத்தின் 25 ஆம் பிரிவின் (எ) ஆம் பந்தியின் கீழ் தேயிலைச் சபையால் ஆக்கப்பட்டு பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சரால் அங்கீகரிக்கப்பட்டு 2008, சனவரி மாதம் 10 ஆம் திகதிய 1531/17 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும் 2008.04.09 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான "2008 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, இலங்கை தேயிலைச் சபை(தேயிலைத் தொழிற்சாலைகளின் நிர்மாணமும் தொழிற்பாடும்) குறைந்தபட்ச நியமங்கள் ஒழுங்குவிதிகள்" அங்கீகரிக்கப்படுமாக.

*26.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சருமானவர்,— மதுவரிக் கட்டளைச்சட்டத்தின் கீழ் கட்டளை,— (52 ஆம் அத்தியாயமான) மதுவரிக் கட்டளைச்சட்டத்தின் 32 ஆம் பிரிவின் கீழ் மேன்மை தங்கிய சனாதிபதியினால் மதுவரி தொடர்பில் ஆக்கப்பட்டு 2008 ஏப்பிறல் மாதம் 10 ஆந் திகதிய 1544/17 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதும் 2008.06.19 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

*27.

மருத்துவக் கட்டளைச் சட்டத்தின் கீழான ஒழுங்குவிதிகள்,— விவாதம் ஒத்திவைக்கப் பட்ட விடயம் (ஒற்றோபர் 03, 2006),— "(105 ஆம் அத்தியாயமான) மருத்துவக் கட்டளைச் சட்டத்தின் 72 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 19 ஆம் பிரிவின் கீழ் சுகாதார நலத்துறை, போசணை அமைச்சரால் இலங்கை மருத்துவப் பேரவையுடன் கலந்தாலோசனை செய்து ஆக்கப்பட்டு 2006, ஓகத்து மாதம் 17 ஆம் திகதிய 1458/16 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதும் 2006.09.05 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக" எனப் பிரேரணை கொண்டு வரப்பட்டு எடுத்தியம்பப்பெற்றது.

*28.

தபால், தொலைத்தொடர்புகள் அமைச்சர்,— அஞ்சல் அலுவலகக் கட்டளைச் சட்டத்தின் கீழ் விதி,— (190ஆம் அத்தியாயமான) அஞ்சல் அலுவலகக் கட்டளைச் சட்டத்தின் 12, 21, 25, 27, 81, 62, 06, 39, 49, 44, 68, 67, 40, 24, 59, 60, 35, 59, 67 மற்றும் 64ஆம் பிரிவுகளின் கீழ், அஞ்சல், தொலைத்தொடர்புகள் அமைச்சரால் நிதி அமைச்சரின் உடன்பாட்டுடன் ஆக்கப்பட்டு, 2007 ஏப்பிறல் மாதம் 25 ஆம் திகதிய 1494/10 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும் 2007. 07. 17 ஆந் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான விதி அங்கீகரிக்கப்படுமாக.

*29.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சருமானவர்,— அரசியலமைப்பின் கீழான தீர்மானம் (இல. 1),— 2002.01.28 ஆம் திகதி அரசாங்க சேவையிலிருந்து ஓய்வு பெற்ற தேர்தல் ஆணையாளர் திரு. தயானந்த திசாநாயக்க அவர்கள், அரசியலமைப்பின் பதினேழாவது சீர்திருத்தத்தின் 27 (2) ஆம் பிரிவின் கீழ் 2002.01.29 ஆந் திகதியிலிருந்து குறித்த பதவிக்கு மீள நியமிக்கப்பட்டார். அதனையடுத்து, அரசாங்க சேவையில் மேற்கொள்ளப்பட்ட சம்பளத் திருத்தங்களின் வண்ணம், தேர்தல் ஆணையாளரின் சம்பளம் 2006.11.23 ஆம் திகதி பாராளுமன்றத்தினால் தீர்மானிக்கப்பட்டது, எனினும், செயலாளர் பிரமாணக் குறிப்பின் கீழ் இந்தப் பதவிக்குரிய வருடாந்த சம்பள ஏற்றங்களைக் கொடுப்பனவு செய்வது தொடர்பாக குறித்த சந்தர்ப்பத்தில் தீர்மானிக்கப் படவில்லை யாதலால், தேர்தல் ஆணையாளர் திரு. தயானந்த திசாநாயக்க அவர்கள் மீள சேவைக்கு அமர்த்தப்பட்ட 2002.01.29 ஆம் திகதியிலிருந்து பதவி வகிக்கும் வரையான காலத்திற்குரிய சம்பள ஏற்ற பெறுமானங்களையும் சம்பளத்துடன் சேர்த்து வழங்க வேண்டுமென இப் பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*30.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதியமைச்சரும்,- அரசியலமைப்பின் கீழான தீர்மானம் (இல.2),— இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 153(1) ஆம் உறுப்புரையின் பிரகாரம் திரு. எஸ். சுவர்ணஜோதி அவர்கள் 2008.01.04 ஆம் திகதியிலிருந்து கணக்காய்வாளர் தலைமை அதிபதி பதவிக்கு நியமிக்கப்பட்டதையடுத்து, கணக்காய்வாளர் தலைமை அதிபதி பதவிக்குரிய எஸ். எல். 4 ரூபா 47,515-12x1,425 — 64,615 சம்பள அளவுத்திட்டத்தின் ரூ. 58,915 சம்பளத்திட்டத்தில் நிறுவுவதற்கு தீர்மானிக்கப்பட்டது. திரு. சுவர்ணஜோதி அவர்கள் பதவி வகிக்கும் காலம் வருடாந்த ஏற்றத்தை வழங்குவதற்கும் 2008.08.06 ஆம் திகதி அமைச்சரவையினால் தீர்மானிக்கப் பட்டது. ஆகையால், கணக்காய்வாளர் தலைமை அதிபதி திரு. எஸ். சுவர்ணஜோதி அவர்களுக்கு 2008.01.04 ஆந் திகதியிலிருந்து ரூ. 58,915 மாதாந்த சம்பளத்தை வழங்கவும், பதவிவகிக்கும் காலம் வரை பதவிக்குரிய வருடாந்த சம்பள ஏற்றத்தை வழங்கவும் வேண்டுமென இப்பாராளுமன்றம் மேலும் தீர்மானிக்கின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*31.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சரும்,— அரசியலமைப்பின் கீழான தீர்மானம் (இல.3),— நீதிச்சேவை ஆணைக்குழுவின் தவிசாளருக்கும் உறுப்பினர்க ளுக்கும் செலுத்தப்படும் மாதாந்தப் படி, அவர்களின் மாதாந்த சம்பளத்தின் 1/3 க்குச் சமமான ஒரு படியாக இருக்க வேண்டுமெனவும், அது 2007 சனவரி மாதம் 01 ஆந் திகதியிலிருந்து செலுத்தப்பட வேண்டுமெனவும் இப் பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது. நீதிச்சேவை ஆணைக்குழுவின் உறுப்பினர்களின் படிகள் தொடர்பில் இதற்கு முன்னர் பாராளு மன்றத்தினால் நிறைவேற்றப்பட்ட பிரேரணைகளினால் தீர்மானிக்கப்பட்ட படிகளுக்குப் பதிலாக, இந்தப் பிரேரணையினால் தீர்மானிக்கப்படும் படியானது பதிலீடு செய்யப்பட வேண்டுமெனவும் இப் பாராளுமன்றம் மேலும் தீர்மானிக்கின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*32.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சரும்,— அரசியலமைப்பின் கீழான தீர்மானம் (இல.1),— அரசியலமைப்பின் 54(1) ஆம் உறுப்புரையின் கீழ் தாபிக்கப்பட்ட அரசாங்க சேவை ஆணைக்குழுவின் தவிசாளரினதும், உறுப்பினர்களினதும் ஊதியமும் படிகளும் 2006.01.01 ஆம் திகதியிலிருந்து பின்வருமாறு அமைதல் வேண்டுமென இப்பாராளு மன்றம் தீர்மானிக்கின்றது:—

**<u>தவிசாளர் (முழு நேர)</u>**

| | | |
|---|---|---|
| ஊதியம் | - | ரூ. 65,000.00 மாதாந்தம் |
| எரிபொருள் படி | - | ரூ. 14,400.00 மாதாந்தம் |
| மொத்தம் | - | ரூ. 79,400.00 |

**<u>உறுப்பினர்கள்</u>**

| | | |
|---|---|---|
| ஊதியம் | - | ரூ. 30,000.00 மாதாந்தம் |

அத்துடன், அதிகரிக்கப்பட்ட சம்பளத்தில் (படிகள் நீங்கலாக) 50 வீதம் 2006.01.01ஆம் திகதியிலிருந்தும், மிகுதி 50 வீதத்துடனான மொத்த ஊதியம் 2007.01.01 ஆம் திகதியி லிருந்தும் செலுத்தப்பட வேண்டுமெனவும், அரசாங்க சேவை ஆணைக்குழுவின் தவிசாள ருக்கும் உறுப்பினர்களுக்கும் செலுத்தப்பட வேண்டிய ஊதியமும், படியும் தொடர்பில்

இதற்கு முன்னர் பாராளுமன்றத்தினால் நிறைவேற்றப்பட்ட பிரேரணையினால் தீர்மானிக் கப்பட்ட ஊதியமும் படிகளுக்கும் பதிலாக இந்தப் பிரேரணையினால் தீர்மானிக்கப்படும் ஊதியமும், படிகளும் பதிலீடு செய்யப்பட வேண்டுமெனவும் இப்பாராளுமன்றம் மேலும் தீர்மானிக்கின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*33.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சரும்,— அரசியலமைப்பின் கீழான தீர்மானம் (இல.2),— அரசியலமைப்பின் 155அ(1) ஆம் உறுப்புரையின் கீழ் தாபிக்கப்பட்ட தேசிய பொலிசு ஆணைக்குழுவின் தவிசாளரினதும் உறுப்பினர்களினதும் கொடுப்பனவுகளும் படிகளும் 2006.01.01 ஆம் திகதியிலிருந்து நடைமுறைக்கு வருமாறு பின்வருமாறானதாக அமைதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது:—

| | | | |
|---|---|---|---|
| **தவிசாளர் (முழு நேர)** | | | |
| | கொடுப்பனவு | - | ரூ. 65,000.00 மாதாந்தம் |
| | எரிபொருள் படி | - | ரூ. 14,400.00 மாதாந்தம் |
| | மொத்தம் | - | ரூ. 79,400.00 |
| **உறுப்பினர்கள்** | | | |
| | கொடுப்பனவு | - | ரூ. 30,000.00 மாதாந்தம் |

அத்துடன், அதிகரிக்கப்பட்ட கொடுப்பனவில் (எரிபொருள் படிகள் நீங்கலாக) 50 வீதம் 2006.01.01 ஆம் திகதியிலிருந்தும் மிகுதி 50 வீதத்துடனான மொத்தக் கொடுப்பனவு 2007.01.01 ஆம் திகதியிலிருந்தும் செலுத்தப்பட வேண்டுமெனவும் தேசிய பொலிசு ஆணைக்குழுவின் தவிளாசருக்கும் உறுப்பினர்களுக்கும் செலுத்தப்பட வேண்டிய கொடுப்பனவுகளும் படியும் தொடர்பில் இதற்கு முன்னர் பாராளுமன்றத் தினால் நிறைவேற்றப்பட்ட பிரேரணையினால் தீர்மானிக்கப்பட்ட கொடுப்பனவுகளும் படிகளுக்கும் பதிலாக இந்தப் பிரேரணையினால் தீர்மானிக்கப்படும் கொடுப்பனவுகளும் படிகளும் பதிலீடு செய்யப்பட வேண்டுமெனவும் இப்பாராளுமன்றம் மேலும் தீர்மானிக் கின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*34.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சரும்,— இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களை புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுச் சட்டத்தின் கீழ் தீர்மானம்,— 1994 ஆம் ஆண்டின் 19ஆம் இலக்க, இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களை புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுச் சட்டத்தின் 2(7) ஆம் பந்தியின் பிரகாரம் அக் குழுவின் தவிசாளரினதும் உறுப்பினர்களினதும் சம்பளங்களும் படிகளும் 2006.01.01 ஆம் திகதியிலிருந்து நடைமுறைக்கு வருமாறு பின்வருமாறானதாக அமைதல் வேண்டு மென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது:—

| | | | |
|---|---|---|---|
| **தவிசாளர் (முழு நேர)** | | | |
| | சம்பளம் | - | ரூ. 66,000.00 மாதாந்தம் |
| | எரிபொருள் படி | - | ரூ. 14,400.00 மாதாந்தம் |
| | மொத்தம் | - | ரூ. 80,400.00 |
| **உறுப்பினர்கள்** | | | |
| | சம்பளம் | - | ரூ. 65,000.00 மாதாந்தம் |
| | எரிபொருள் படி | - | ரூ. 12,000.00 மாதாந்தம் |
| | மொத்தம் | | ரூ. 77,000.00 |

அத்துடன், அதிகரிக்கப்பட்ட சம்பளத்தில் (படிகள் நீங்கலாக) 50 வீதம் 2006.01.01ஆம் திகதியிலிருந்தும் மிகுதி 50 வீதத்துடனான மொத்தச் சம்பளம் 2007.01.01ஆம் திகதியிலிருந்தும் செலுத்தப்பட வேண்டுமெனவும் இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களை புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவின் தவிசாளருக்கும் உறுப்பினர்களுக்கும் செலுத்தப்பட வேண்டிய சம்பளமும் படியும் தொடர்பில் இதற்கு முன்னர் பாராளுமன்றத்தினால் நிறைவேற்றப்பட்ட பிரேரணையினால் தீர்மானிக்கப்பட்ட சம்பளமும் படிகளுக்கும் பதிலாக இந்தப் பிரேரணையினால் தீர்மானிக்கப்படும் சம்பளங்களும் படிகளும் பதிலீடு செய்யப்பட வேண்டுமெனவும் இப்பாராளுமன்றம் மேலும் தீர்மானிக்கின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*35.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சரும்,— இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுச் சட்டத்தின் கீழ் தீர்மானம்,— 1996 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க, இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுச் சட்டத்தின் 8 ஆம் பந்தியின் பிரகாரம் தாபிக்கப்பட்ட இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தவிசாளரினதும் உறுப்பினர்களினதும் சம்பளங்களும் படிகளும் 2006.01.01 ஆம் திகதியிலிருந்து நடைமுறைக்கு வருமாறு பின்வருமாறானதாக அமைதல் வேண்டுமென இப்பாராளு மன்றம் தீர்மானிக்கின்றது:—

**தவிசாளர் (முழு நேர)**

| | | |
|---|---|---|
| சம்பளம் | - | ரூ. 65,000.00 மாதாந்தம் |
| எரிபொருள் படி | - | ரூ. 14,400.00 மாதாந்தம் |
| மொத்தம் | - | ரூ. 79,400.00 |

**உறுப்பினர்கள்**

| | | |
|---|---|---|
| சம்பளம் | - | ரூ. 30,000.00 மாதாந்தம் |

அத்துடன், அதிகரிக்கப்பட்ட சம்பளத்தில் (படிகள் நீங்கலாக) 50 வீதம் 2006.01.01 ஆம் திகதியிலிருந்தும் மிகுதி 50 வீதத்துடனான மொத்தச் சம்பளம் 2007.01.01 ஆம் திகதியிலிருந்தும் செலுத்தப்பட வேண்டுமெனவும் இலங்கை மனித உரிமைகள் ஆணைக் குழுவின் தவிசாளருக்கும் உறுப்பினர்களுக்கும் செலுத்தப்பட வேண்டிய சம்பளங்களும் படிகளும் தொடர்பில் இதற்கு முன்னர் பாராளுமன்றத்தினால் நிறைவேற்றப்பட்ட பிரேரணையினால் தீர்மானிக்கப்பட்ட சம்பளங்களுக்கும் படிகளுக்கும் பதிலாக இந்தப் பிரேரணையினால் தீர்மானிக்கப்படும் சம்பளங்களும் படிகளும் பதிலீடு செய்யப்பட வேண்டுமெனவும் இப்பாராளுமன்றம் மேலும் தீர்மானிக்கின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

36.

அரசியலமைப்பிற்கான பத்தொன்பதாவது திருத்தச் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

37.

வடக்கு மற்றும் கிழக்கு இரு மாகாணங்களையும் தற்காலிகமாக இணைத்திருப்பதை இரத்துச் செய்வதற்கான (விசேட பிரமாணங்கள்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றது.

[1] "சட்டமூலம் இப்பொழுது இரண்டாம் முறையாக மதிப்பிடப்பெறுமாக" எனப் பிரேரணை கொண்டுவரப்பட்டு எடுத்தியம்பப்பெற்றது.